பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
077 120 9996
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 211

வியாழக்கிழமை
25 ஜூன் 2026

ஆனி 11 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

## மாநகர மேயர் காண்டீபன், உபதவிசாளர் கிஷோர்
# ஆளுநரால் பதவி நீக்கம்



### அதிகார துஷ்பிரயோகம் என பலரும் கொதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25

வவுனியா மாநகரசபையின் மேயர் சு.காண்டீபன், சாவகச்சேரி நகரசபையின் உபதவிசாளர் ஞா.கிஷோர் ஆகியோர் வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனால் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். »11

## வடமாகாண ஆளுநரால் அதிகார துஷ்பிரயோகம்

### நாமல் ராஜபக்ச கொதிப்பு

கொழும்பு, ஜூன் 25

சாவகச்சேரி நகரசபை உபதவிசாளர் கிஷோரை பதவி நீக்கியிருப்பதானது வடமாகாண ஆளுநரின் அதிகாரதுஷ்பிரயோகத்தையே வெளிப்படுத்துகிறது என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித் »11

பெண் மருத்துவர் படுகொலை

## கணவனும், மனைவியும் சாவகச்சேரியில் கைது!

### முஸ்லிம் பெண்போன்று வேடமிட்டிருந்தனர்

யாழ்ப்பாணம், ஜூன் 25

கண்டி தெல்தெனியப் பகுதியில் பெண் மருத்துவர் ஒருவர் சொகுசுக் காருக்குள் சடலமாக மீட்கப்பட்ட நிலையில், இந்தப் படுகொலையுடன் தொடர்புடைய »11

ஆளுநரின் செயற்பாடு

## கருத்துச் சுதந்திரம் மீதான அப்பட்டமான தாக்குதலே!

### இளங்குமரன் எம்.பி. கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

கருத்துச் சுதந்திரத்தை வெளிப்படுத்தியமைக்காக ஒருவரின் பதவியைப் பறிப்பதென்பது ஜனநாயகக் கொள்கைகளுக்கு முற்றிலும் முரணான செயலாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் »11

கைதாவதைத் தடுக்கக்கோரிய

## கோத்தாபயவின் மனுவை ஒத்திவைத்தது நீதிமன்று

### ஜூலை 6ஆம் திகதியே விசாரணை

கொழும்பு, ஜூன் 25

உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தன்னைக் கைதுசெய்வதைத் தடுக்கக்கோரிய கோத்தாபய ராஜபக்சவின் »11

காக்கைதீவு, கல்லுண்டாய்

## குப்பைக் கிடங்குகளில் நேற்று மீண்டும் தீப்பரவல்

### பொதுமக்கள் குழப்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்ப்பாணம் - காக்கைதீவில் உள்ள யாழ்.மாநகரசபையின் குப்பைக் கிடங்கிலும், கல்லுண்டாய் வெளி கழிவுகள் சேகரிப்பு மையத்திலும் நேற்றுப் »11

மாகாண சபைகளுக்கென

## சட்டமூலம் நிறைவேறினால் தேர்தல் நிச்சயம் நடக்கும்

கொழும்பு, ஜூன் 25

மாகாணசபைத் தேர்தல் தொடர்பான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னர் நிச்சயம் தேர்தல் நடத்தப்படும் என ஆளுங்கட்சி பிரதம கொறடாவும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ »11

## நீதிமன்ற ஆவண மோசடிக்காக பொலிஸ் அதிகாரிக்கு மறியல்!

முல்லைத்தீவு, ஜூன் 25

வாகன இலக்கத்தகடு சார்ந்த மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். »11






விபத்துகளைக் கட்டுப்படுத்தத் தவறிய

## போக்குவரத்துப் பொலிஸ் அதிகாரி உடனடியாகப் பதவி விலக வேண்டும்

### கிளிநொச்சியில் வெடித்தது போராட்டம்

கிளிநொச்சி, ஜூன் 25

கிளிநொச்சியில் அண்மைக் காலமாக விபத்துகள் அதிகரித்துவரும் நிலையில், போக்குவரத்துப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்றுப்போராட்டம் இடம்பெற்றது. »11

போட்டிப் பரீட்சையில் அநீதி

## வேலையற்ற பட்டதாரிகள் யாழில் இன்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக இன்று போராட்டம் நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளனர். ஆசிரியர் வேலைவாய்ப்புப் போட்டிப் பரீட்சை அண்மையில் நடைபெற்றது. »11

முச்சந்தி மாறன்

"வேதம் ஓதிக்கொண்டு வந்தாலும் வேதாளமெண்டால் முருங்கைமரம் ஏறாமல் இருக்காது கண்டியளோ"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 24.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4470 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 17 32 71 76 |
| விசேட எழுத்து | A |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 24.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1537 |
| வெற்றி இலக்கினம் | விருச்சிகம் |
| வெற்றி இலக்கங்கள் | 11 23 28 59 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 24.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0496 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 0 0 2 4 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 24.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2576 |
| ஆங்கில எழுத்து | J |
| சுப்பர் இலக்கம் | 14 |
| வெற்றி இலக்கங்கள் | 30 37 42 72 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 24.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6228 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கங்கள் | 5 4 8 9 6 9 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 24.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2258 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 04 07 35 44 |
| விசேட எழுத்து | C |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 24.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0344 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 04 22 36 |

# நாட்டில் அபாயக் கட்டத்தில் டெங்கு நுளம்பு அடர்த்தி!

## சுகாதார பூச்சியியல் சங்கம் எச்சரிக்கை

**கொழும்பு, ஜூன் 25**

**இலங்கையின் பல பாகங்களிலும் டெங்கு நோயை பரப்பக்கூடிய நுளம்புகளின் அடர்த்தி அதிகரித்துள்ளது என்று சுகாதார பூச்சியியல் சங்கம் எச்சரித்துள்ளது.**

டெங்கு நுளம்புகளின் எண்ணிக்கையை அளவிடுவதற்காக சர்வதேச ரீதியில் பயன்படுத்தப்படும் அளவுகோலான 'பிரெட்டோ குறியீடு' அடிப்படையில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நாடளாவிய கணக்கீடுகளிலேயே இந்தத் தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. உலக சுகாதார அமைப்பின் சர்வதேச வழிகாட்டுதல்களின்படி, டெங்கு பரவல் அற்ற பாதுகாப்பான சூழலைப் பேணுவதற்கு ஒரு குறிப்பிட்ட பகுதியில் இந்த 'பிரெட்டோ குறியீடு' 3க்குக் குறைவாக பராமரிக்கப்பட வேண்டும். எனினும், இலங்கையின் மேல் மாகாணம், கிழக்கு மாகாணம் மற்றும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல முக்கியபான நகரப் பகுதிகளில் இந்தக் குறியீடு சர்வதேச வரம்பை விடப் பல மடங்கு அதிகமாகப் பதிவாகியுள்ளது.

குறிப்பாக, டெங்கு வைரஸை மிக வேகமாகப் பரப்பக்கூடிய முதன்மை நுளம்பு வகையான 'ஈடிஸ் ஈஜிப்தி' நுளம்புகளின் பெருக்கம் மற்றும் பரவல் நிலை வழமையை விடவும் அதிகமாக இருப்பது இந்தக் கள ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. வீடுகள் மற்றும் பொது இடங்களில் நீர் தேங்கி நிற்கும் இடங்கள் அதிகரித்துள்ளதே இந்த நுளம்புப் பெருக்கத்திற்குக் காரணம் எனச் சுட்டிக்காட் டப்பட் டுள்ளது.

டெங்கு பரவும் அபாயம் மிக உயர்ந்த மட்டத்தை எட்டியுள்ளதால், பொதுமக்களும் உள்ளூராட்சி மன்றங்களும் இணைந்து தத்தமது சூழலில் நீர் தேங்கும் இடங்களை உடனடியாக துப்புரவு செய்ய வேண்டும். தவறும் பட்சத்தில், வரும் மாதங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை கட்டுப்பாடின்றி அதிகரிக்கக் கூடும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## துப்பாக்கிச்சூடு பெண் காயம்!

கொழும்பு, ஜூன் 25

குருநாகல், வெல்லவப் பகுதியில் நேற்றுமுன்தினம் நபரொருவர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார். பொலிஸ் விசாரணைகளின்படி, சந்தேகநபர் வீட்டின் அருகிலுள்ள காட்டுப் பகுதியில் மறைந்திருந்து இந்தத் துப்பாக்கிச்சூட்டை நடத்தியுள்ளதாகத் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பாக வெல்லவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

## தரம்1 மாணவர்கள் உள்ளீர்ப்பு சுற்றுநிருபம் வெளியிட அனுமதி

கொழும்பு, ஜூன் 25

அரச பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கான புதிய சுற்றுநிருபத்தை வெளியிடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக பிரதமர் இதற்கான யோசனையை சமர்ப்பித்துள்ளார்.

இம்முறை புதிய சுற்றுநிருபமானது இலஞ்சம் மற்றும் ஊழல்கள் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றின் பரிந்துரைகளுக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும், பாடசாலை அதிபர்கள், கல்வித்துறை அதிகாரிகள் ஆகியோரின் கருத்துக்கள், யோசனைகள் மற்றும் புதிய கல்வி மறுசீரமைப்புகள் ஆகியவற்றையும் கவனத்தில் கொண்டே இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 2027 ஆம் ஆண்டு தொடக்கம் அடுத்து வரும் காலங்களில் அரச பாடசாலைகளில் முதலாம் தரத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான புதிய விதிமுறைகள் மற்றும் ஆலோசனைகள் அடங்கிய சுற்றுநிருபம் விரைவில் வெளியிடப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. (ச-இ)



## தென்னைப் பயிர்ச்செய்கைக்கு காப்புறுதித் திட்டம் அறிமுகம்!

கொழும்பு, ஜூன் 25

இலங்கையில் புதிய தென்னைப் பயிர்ச்செய்கையை இலக்காகக் கொண்டு தென்னம்பிள்ளைகளுக்கான காப்புறுதித் திட்டம் ஒன்றை விவசாய மற்றும் விவசாயிகள் காப்புறுதிச் சபை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தக் காப்புறுதித் திட்டத்தின் கீழ், சலுகைக் கட்டணக் கொடுப்பனவின் அடிப்படையில் வறட்சி, வெள்ளம், அதிக மழை, சூறாவளி, மண்சரிவு மற்றும் காட்டு யானைகளின் தாக்குதல்களினால் தென்னை பயிர்ச்செய்கைக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு இழப்பீடு வழங்கப்படவுள்ளது.

ஒரு தென்னம்பிள்ளைக்கு 40 ரூபா காப்புறுதி வாரிக் கட்டணமாக செலுத்துவதன் மூலம், வருடாந்தம் 550 ரூபா பெறுமதியான காப்புறுதி இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும் என அந்தச் சபை குறிப்பிட்டுள்ளது.

அதேபோல், அதிகபட்ச காப்புறுதிக் காலமான 6 ஆண்டுகளுக்கு 875 ரூபா வாரிக் கட்டணத்தின் கீழ், ஒரு தென்னம்பிள்ளைக்கு வருடாந்தம் 12,450 ரூபா பெறுமதியான காப்புறுதி இழப்பீட்டைப் [illegible] பட்டுள்ளது. (ச-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 24.06.2026 | புதன்கிழமை | 0936 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| E | 2 3 9 6 1 4 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 24.06.2026 | புதன்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 3202 | W | 29 30 34 71 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 24.06.2026 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Q | 06 25 69 75 | 5363 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | தினம் |
| 24.06.2026 | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 1032 | 16 40 41 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 24.06.2026 | புதன்கிழமை | |
| மகரம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 21 22 27 53 | 4914 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 24.06.2026 | புதன்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| L | 01 | 35 51 58 72 | 2378 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 24.06.2026 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| R | 07 20 41 65 | 3028 |

## அரச ஊழியர்கள், ஓய்வூதியர்கள் பிரச்சினைகளுக்கு ஆணைக்குழு



கொழும்பு, ஜூன் 25

அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் நீண்டகாலச் சம்பள முரண்பாடுகள் மற்றும் ஓய்வூதியப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வுகளை வழங்கும் நோக்கில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் விசேட தேசிய ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற அமைச்சின் செயலாளரான அசோக பீரிஸ் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள இந்தச் 'சம்பளம் மற்றும் ஓய்வூதிய ஆணைக்குழு' 2026.06.22 ஆம் திகதியிட்ட 2494/05 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பிரகடனம் மூலம் நிறுவப்பட்டுள்ளது. பல வருடங்களாக அரச சேவையில் நிலவி வரும் சம்பள முரண்பாடுகள் மற்றும் அதனால் பொது நிதி நிர்வாகத்திற்கு ஏற்பட்டுள்ள சவால்களைக் கருத்திற்கொண்டு, இந்த ஆணைக்குழுவிடம் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. புதிய முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கும் போது, வெறும் சம்பள உயர்வை மட்டும் இலக்காகக் கொள்ளாமல், மாறிவரும் உலகளாவிய புதிய தொழில்நுட்பப் போக்குகளைக் கவனத்தில் கொள்ளுமாறு ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அறிவுறுத்தியுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சிறுபோக நெல் கொள்வனவுக்கு தாமதமின்றி நிதியொதுக்கீடு

## ஜனாதிபதி தெரிவிப்பு

**கொழும்பு, ஜீன் 25**

**சிறுபோகத்தில் விவசாயிகளிடமிருந்து தங்குதடையின்றி நெல் கொள்வனவு செய்வதற்குத் தேவையான நிதியை, எவ்வித தாமதமுமின்றி உடனடியாக ஒதுக்குமாறு நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அறிவுறுத்தியுள்ளார்.**

அரச நெல் கொள்வனவுத் திட்டங்கள் மற்றும் சந்தை நிலைவரங்கள் குறித்த விசேட மறு ஆய்வுக் கலந்துரையாடல் நேற்றுப் புதன்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது, சந்தையிலுள்ள நெல் மற்றும் அரிசித் தட்டுப்பாடு, களஞ்சியசாலைகளின் நிலைமை மற்றும் விவசாயிகளுக்கான நியாயமான விலை வழங்கல் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. கடந்த வருட சிறுபோக நெல் கையிருப்புகள் சந்தைக்குப்போது மான அளவு விநியோகிக்கப் படாமையே தற்போதைய அரிசி விலை அதிகரிப்புக்கு முக்கியமான காரணம் என ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டினார். மேலும், எதிர்கால கால நிலை மாற்றங்களின்போது நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்யப் பாதுகாப்பான நெல் கையிருப்புகளைப் பேணவேண்டும் என்றும், இதனை ஒரு சாதாரண நிர்வாகச் செயல்முறையாகக் கருதாமல், தேசியப் பாதுகாப்புடன் தொடர்புடைய முக்கியமான விடயமாகக் கருதிச்செயற்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார். (ச-இ)

# அரசு எரிபொருள் விலையைக் குறைக்கத் திணறுவது ஏன்?

## முஜிபுர் ரஹ்மான் கேள்வி



கொழும்பு, ஜீன் 25

அண்டை நாடுகளான இந்தியா, பாகிஸ்தான் போன்றவற்றில் உலக சந்தைக்கு ஏற்ப எரிபொருள் விலைகள் குறைக்கப்பட்டாலும், இலங்கையில் அரசாங்கத்தின் தன்னிச்சையான தவறுகள் மற்றும் நிர்வாகத்திறமையின்மைகாரணமாகவேவிலைகுறைக்கப்படவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குற்றம் சாட்டியுள்ளார்.

உலக சந்தையில் இல்லாதவாறு ஒரு பீப்பாய் எரிபொருளை 284 டொலருக்கு அரசாங்கம் கொள்வனவு செய்ததால் ஏற்பட்ட நட்டத்தையும், தரமற்ற நிலக்கரி இறக்குமதியால் மின்சாரத்துறைக்கு ஏற்பட்ட நட்டத்தையும் ஈடுகட்டவே வரிகள் மூலம் மக்களிடம் பணம் சுரண்டப்படுகிறது. தற்போதைய 100 ரூபா விலைக் குறைப்பு என்பது மக்களின் மீதான அக்கறையால் அல்ல, நிர்வாகத்தவறுகளை மூடிமறைக்கும் நாடகமே என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

# நீதித்துறைக் கட்டமைப்புக்கு அரசாங்கத்தால் மரணஅடி!

## எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜீன் 25

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை எவ்வித விஞ்ஞானபூர்வ முறையுமின்றி அதிகரித்து, நீதித்துறையின் சுதந்திரத்திற்கு மரண அடி கொடுக்க முயற்சிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், நீதியை நிலைநாட்டும் நடைமுறை தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தி கொண்டுவந்த பிரேரணையைச் சபாநாயகர் தன்னிச்சையாக நிராகரித்ததை வன்மையாகக் கண்டித்தார். மேன்முறையீட்டு மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை நீடிப்பதன் மூலம், நீதித்துறையின் மீதான நம்பிக்கையைச் சீர்குலைக்க அரசாங்கம் நேரடியாகத் தலையிடுகிறது என்றும், இது அரசியலமைப்புக்கு எதிரான செயல் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

# செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் சோமரத்னவிடம் பன்னாட்டு விசாரணை



## ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, ஜீன் 25

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பாக, இராணுவ லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்சவை பன்னாட்டு விசாரணைக்கு உட்படுத்தி உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய அவர், செம்மணியில் 400க்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார். மாணவி கிருஷாந்தி படுகொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட சோமரத்ன ராஜபக்ச, செம்மணியில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் புதைக்கப்பட்ட விபரங்களை முன்பு வெளியிட்டிருந்தார். தற்போது மீண்டும் அகழ்வாய்வுகள் நடக்கும் நிலையில், பன்னாட்டு விசாரணையாளர்கள் முன்னிலையில் சாட்சியமளிக்கத் தயாரென அவர் ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியுள்ளதால், அவரிடம் உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும் என ரவிகரன் கோரியுள்ளார். (க-246)




# திறந்த வீட்டுக்குள்ள ...!-1

செய்யும் தொழிலே தெய்வம் தான். அதுக்காக வேலையை செய்யிறவை எல்லாம் தாங்கள் தான் ஏதோ கடவுள் எண்டமாதிரியும், மற்றவையெல்லாம் அற்ப மானிடப் பதர்கள் எண்டமாதிரியும் நடந்துகொள்றதில கலிகாலத்தின்ர கோலமே தவிர வேறையொண்டுமில்லை. அதிலையும் உந்த மின்சாரசபையில கறண்ட் கட் பண்ண வாறவை தங்களை விட்டால் ஆக்கள் இல்லை எண்ட ரேஞ்சில நடந்துகொள்ளுகினமாம். அதைப்பற்றி ஒரு சம்பவம்.

கிட்டடியில ஒரு வீட்டில குடும்பத்தலைவர் திடீரெண்டு செத்துப்போட்டார். செத்தவீடெண்டால் அந்தியேட்டி வரை வீடு முழுக்க ஆக்கள் மயமாத்தான் இருக்கும். ஏனெண்டால் செத்தவீடு, கலியாணவீடு எண்டால் வெளிநாட்டில இருக்கிறவை எப்பாடுபட்டாவது ஊருக்கு வந்திடுவினம். செத்தவீட்டோட வெளிநாட்டுக்காரரை வடிவாக் கவனிக்க வேண்டிய வேலையும் வீட்டுக்காரரின்ர தலையில விழுந்திடும். எல்லாரும் ஒண்டா இருக்கேக்கயும், ஒரு துக்க காரியம் நடந்த கவலையிலயும் வழக்கமாச் செய்ய வேண்டிய அலுவல்களைக் கவனிக்காமல் விட்டிடுவினம். அப்பிடித்தான் உந்தச் செத்தவீட்டுக்காரரும் அந்தமாதம் கரண்ட் பில்லைக் கட்ட மறந்திட்டினம். செத்தவீட்டுக்கு வந்த வெளிநாட்டுக்காரர் வெளியால சொந்தக்காரரோட கதைச்சுக்கொண்டிருக்கேக்க, மோட்டச்சைக்கிளில ரண்டுபேர் வந்திருக்கினம். அப்பிடி வந்தவை முன்னுக்கு இருந்த வீட்டுக்காரரிட்ட தாங்கள் ஆரெண்டு அறிமுகப் படுத்தாமல் விடுவிடெண்டு கரண்ட் மீற்றருக்குக் கிட்டப் போய் பார்த்திருக்கினம். அந்த வீட்டில வழக்கமா கரண்ட் பில் கூடுதலாத்தான் வாறது. மீற்றரில ஏதும் பிழைபோல எண்டு மின்சாரசபைக்கு சிலமாதத்துக்கு முன்னம் வீட்டுக்காரர் அறிவிச்சிருந்தவை. அதைப்பாக்கத்தான் வந்திருக்கினம் போல எண்டு வீட்டுக்காரர் நினைச்சிருக்கினம்.

வந்த ரண்டு பேரும் 'அண்ணை, மோட்டர் ஏதும் வேலை செய்யுதோ?' எண்டு கேக்க, வீட்டுக்காரர் ஓமெண்டிருக்கினம். 'அப்ப ஒருக்கா நிப்பாட்டுங்கோ' எண்டு அவை சொல்லியிருக்கினம். மோட்டர் போடாட்டி மீற்றர் குறைவா ஓடுதோ எண்டு பாக்கப்போயினம் எண்டு வீட்டுக்காரர் நினைச்சுக் கொண்டு, ஓடிப்போய் மோட்டரை நிப்பாட்டி இருக்கினம். அடுத்த நிமிசமே வீடுமுழுக்க கரண்ட் கட்டாப் போட்டுது. என்ன ஏதெண்டு பார்த்தால் மின்சாரசபையில இருந்து வந்தவை மீற்றர் பொக்ஸு'க்குப் பக்கத்தில இருந்த பியூஸைப் பிடுங்கிட்டினம். இத்தனைக்கும் எட்டுச்செலவுக்காக வீட்டுக்குள்ள சமையலுக்காக மிக்ஸியில ஏதோ அரைச்சுக்கொண்டிருந்தவை. இவை பியூஸைப் பிடுங்க மிக்ஸிக்க போட்டது அரைபடாம அப்பிடியே கிடந்திருக்குது. வெளிநாட்டால வந்த ஒருத்தர் லப்ரொப்பில 'ஒன்லைன்' வேலை செய்து கொண்டிந்தவர். இவை சொல்லாமல் கொள்ளாமல் கரண்டை கட் பண்ண, ரவுட்டர் நிண்டு இன்ரர்நெற் கட்டானதால அவர் வேலையைச் செய்ய முடியாமல், கரண்ட் கட் எண்டு மேலிடத்துக்குச் சொல்லவும் முடியாமல் பெரும் சிக்கல். பிறகு அங்க நிண்ட இன்னொருத்தரின்ர போனில 'ஹொட் ஸ்பொட்டை' போட்டுத்தான் வட்ஸப்பில தகவல் அனுப்பி, தன்ர வேலையைக் காப்பாத்தினவர். இல்லாட்டி வேலை பறந்திருக்கும்.

இப்பிடியெல்லாம் செத்தவீடு நடந்த சோகத்தில இருந்தவையைப் பதகளிப்படுத்தின பிறகுதான் 'நீங்கள் இந்த மாத பில் கட்டேலை அதால தான் கட் பண்ணினாங்கள்' எண்டு சொல்லவீட்டுக்காரருக்குக்கடும்கோபம். 'அண்ணை கரண்டை கட் பண்ணுறதுக்கு ஒரு முறை இருக்கெல்லோ. அதின்படி செய்யாமல் இப்பிடி ஒரு உயிரைப் பறிகுடுத்துட்டு இருக்கிற வீட்டில சடார் புடாரெண்டு புகுந்து ஒண்டுமே சொல்லாம கரண்டை கட் பண்ணுறது நியாயமோ?' எண்டு அவை கேட்டிருக்கினம். அதுக்குப் பிறகு அந்த மின்சாரசபைக்காரர் செய்தது தான் இன்னும் அழிச்சாட்டியமான வேலை. அது என்ன எண்டு நாளைக்குப் பாப்பம்.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வடந்தை இதழுக்குக் கட்டுரை மீள்கோரல்

யாழ்ப்பாணம், ஜூன் 25
வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் வருடந்தோறும் வெளியிடப்படும் வடந்தை இதழின் இவ்வாண்டு மலருக்கான கட்டுரைகள், மீளக்கோரப்பட்டுள்ளன. ஆர்வமுடையவர்கள் 'வடக்கு மாகாண வாழ்வில் அருகிச்செல்லும் சடங்குகளும் மருவிவரும் பாரம்பரியங்களும்' எனும் கருப்பொருளுக்கு அமைவாக தங்களுடைய கட்டுரைகளை, எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதிக்கு முன்னதாக, பண்பாட்டலுவல்கள் அலகு, வட மாகாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.
கட்டுரைகள் வடக்கு மாகாணம் சார்ந்ததாகவும், அரசியல் கலப்பற்றதாகவும், தனிப்பட்ட நபரை பாதிக்காத கருத்துக்களுடனும் இருத்தல் வேண்டும். பத்திரிகைகளிலோ, சஞ்சிகைகளிலோ, வேறு மலர்களிலோ பிரசுரிக்கப்பட்ட கட்டுரைகள் நிராகரிக்கப்படும். கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட மென்பிரதியை NPC.CULTURE@YAHOO.COM என்ற மின்னஞ்சல் முகவரிக்கும், வன்பிரதியை அலுவலக முகவரிக்குத் தபால் மூலமாகவோ, நேரடியாகவோ சமர்ப்பிக்கலாம். கட்டுரையுடன் தொடர்புடையவரின் தொலைபேசி இலக்கம், தபால் முகவரி, புகைப்படம் முதலான விபரங்களை இணைத்தல் வேண்டும். மதிப்பீட்டுக்குழுவினரால் தெரிவுசெய்யப்படும் ஆக்கங்கள் மட்டும் வடந்தை இதழில் வெளியிடப்படும். மேலதிக விபரங்களுக்கு 021221 5706, 021205 4105, 021222 2583, 0212219259 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ள முடியும். (க)



# பழ உற்பத்தியாளர் சங்கத்தின் எதிர்காலத் திட்டங்கள் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூன் 25
மீசாலை ஏ9 வீதிக்கு அருகாமையில் அமைந்துள்ள தென்மராட்சி பழ உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தின் ( பழமுதிர்ச் சோலை) எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் அண்மையில் ஆராயப்பட்டது. வடமாகாணக் கூட்டுறவுத் திணைக்களத்தில் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் செல்வி அகல்யா செகராஜா தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் , சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர், சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர், தென்மராட்சி கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ். மாவட்ட சி.க.கூ. சங்க சமாச செயலாளர் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர், தென்மராட்சி பழ உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவுச் சங்கத் தலைவர், சாவகச்சேரி பிராந்திய சி.க.கூ. சங்க உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். இந்தக் கலந்துரையாடலின்போது, சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கம், தென்மராட்சி பழ உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், சி.க.கூ. சங்கம் ஆகியன இணைந்து மேற்கொள்ளவுள்ள எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டது. (க-159)

# கும்பாபிஷேகப் பெருவிழா

யாழ்ப்பாணம்,ஜூன் 25
கொக்குவில் கிழக்கு யாழ்விஷன் இந்துமா மன்றத்தின் விசாலாட்சி சமேத காசிவிஸ்வநாதர் ஆலயத்தின் பெரிய நந்தி மஹா கும்பாபிஷேகப் பெருவிழா இன்று வியாழக்கிழமை காலை 9.47 மணி தொடக்கம் 10.30 மணி வரை இடம்பெறும். அன்றைய தினம் காலை 7.28 மணிக்குப் பூசைகள்,ஹோமங்கள் மற்றும் வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து காலை 9.47 மணிக்கு மஹா கும்பாபிஷேகம் இடம்பெறும். தொடர்ந்து சுவாமி வீதி வலம் இடம்பெறும். விழாவில் ஈழத்தின் புகழ்பூத்த சிவாச்சாரியர்கள் கலந்துகொள்வர். தென்னிந்திய கர்நாட இசைக்கலைஞரின் பக்தி இசைக்கச்சேரியும் இடம்பெறும். (க)



# போதைப்பொருளுடன் பெண்ணொருவர் கைது

கொழும்பு, ஜூன் 25
கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் 36 கிலோகிராம் 'ஹஷிஸ்' போதைப்பொருளுடன் 18 வயதுடைய யுவதி ஒருவர் இலங்கை சுங்கப்பிரிவின் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் தொகையின் மதிப்பு 352 மில்லியன் ரூபாவுக்கும் அதிகம் என அதிகாரிகள் மதிப்பிட்டுள்ளனர். சந்தேகநபர் கனடாவின் டொராண்டோ நகரில் இருந்து டுபாய் வழியாக இலங்கை வந்தடைந்துள்ளார். (ச-இ)

# உலக சுற்றாடல் தினமும் சஞ்சிகை வெளியீடும்



வவுனியா, ஜூன் 25
வடக்கு மாகாண விவசாய அமைச்சும், வவுனியா மாவட்ட செயலகமும் இணைந்து நடத்திய உலக சுற்றாடல் தின நிகழ்வும், அறுவடை சஞ்சிகை வெளியீடும் வவுனியா மாநகர சபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றன. வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் சண்முகராஜா சிவஸ்ரீ தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், முதன்மை விருந்தினராக, வவுனியா மாவட்டச் செயலர் பி.ஏ.சரத்சந்திர, சிறப்பு விருந்தினராக வவுனியா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் அ.அற்புதராஜா.ஆகியோர் கலந்துகொண்டனர்.
வவுனியா நகரசபை வாயிலில் இருந்து விருந்தினர்கள் ஊர்வலமாக மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டதைத்தொடர்ந்து. ஏனைய நிகழ்வுகள் இடம்பெற்றன. (க-110)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே பரஸ்பரம் அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படக்கூடும். எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். முக்கியமான பிரமுகர்களின் தொடர்பும், அதனால் அனுகூலமும் உண்டாகும்.

**மிதுனம்:** சகோதரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். தந்தைவழியில் திடீர்ச்செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாகமுடியும். கணவன் –மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** தாய்வழியில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகமுடியும். அதிகாரிகளின் சந்திப்பும் அதனால் காரியங்களில் வெற்றியும் உண்டாகும். புதிய முயற்சியைக் காலையிலேயே தொடங்குவது நல்லது.

**சிம்மம்:** மனதில் தைரியமும் உற்சாகமும் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாகமுடியும். தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாகமுடியும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும்.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தந்தைவழி உறவினர்களுக்காக செலவு செய்யவேண்டிவரும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். கூடிய வரை இன்று புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டிவரும்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். கணவன் –மனைவிக்கிடையில் பரபஸ்பரம் அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாகமுடியும். காரிய அனுகூலம் உண்டாகும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

**கும்பம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். சிலருக்குக் குடும்பத்துடன் சென்று குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**மீனம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை






## பொய்யாமொழி

**இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை**

**பொருள்:** வறுமையுள் வறுமை, விருந்தினரைப் போற்றாமல் நீக்குதல்; வல்லமையுள் வல்லமை என்பது அறிவிலார் தீங்கு செய்தலைப் பொறுத்தலாகும்.


# தீயில் எரியும் உண்மைகள்!

யாழ்ப்பாணம்-காக்கைதீவுக் குப்பைக்கிடங்கில் மீண்டுமொரு தடவை மிகப்பெரும் தீப்பரவல் ஏற்பட்டிருக்கின்றது. இந்தத் தீப்பரவலால் ஏற்பட்ட கரிய நச்சுவாயு வெளியேற்றத்தைத் தொடர்ந்து அந்தப் பகுதிகளைச் சேர்ந்த பல குடும்பங்கள் இரவோடுஇரவாக தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறி ஆலயங்களிலும், அயல் கிராமங்களிலும் தஞ்சமடைந்திருக்கின்றனர். முதியவர்கள், நாள்பட்ட நோயாளர்கள், சுவாசப் பிரச்சினைகள் உள்ளோர் மற்றும் குழந்தைகள் உள்ளிட்ட தரப்பினருக்கு நேற்றுமுன்தின மாலைப்பொழுது மீண்டும் ஒரு துர்க்கனவாக மாறியிருக்கிறது. தவிர, யாழ்.-வட்டுக்கோட்டை வீதி நீண்டநேரப் போக்குவரத்து முடக்கத்தையும் எதிர்கொண்டிருக்கின்றது. மக்கள் வாழவே முடியாத பகுதியாக காக்கைதீவு குடியிருப்புத் திட்டம் மாறியிருக்கின்றது.

யாழ்ப்பாணம் -காக்கைதீவுக் குப்பைக்கிடங்கில் தீப்பரவல் ஏற்படுவது இது முதல்முறையல்ல. கடந்த பலவருடங்களாகவே இந்தவிடயம் தொடர்கதைதான். அதிலும் குறிப்பாக தற்போதைய மாநகரசபை பொறுப்புக்கு வந்தபின்னர் ஐந்துக்கும் மேற்பட்ட தடவைகள் இந்தத் துர்ச்சம்பவங்கள் நேர்ந்துள்ளன. அவ்வாறிருந்தும் இந்த அவசர பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதற்கு யாழ்ப்பாணம் மாநகரசபையாலும், அரசாங்கத்தின் உயர்மட்டப் பிரதிநிதிகளாலும் முடியவில்லையென்றால் மக்கள் யாரைத்தான் நொந்துகொள்வது?. காக்கைதீவில் வசிக்கும் மக்கள் தமக்கு நீதிகோரி போராட்டங்களை நடத்திக் களைத்தேபோய்விட்டனர். ஒருங்கிணைப்புக் கூட்டங்களிலும், உயர்மட்டப் பிரதிநிதிகளிடமும் தமது கோரிக்கைகளைப் பலமுறை முன்வைத்துவிட்டனர். அப்படியிருந்தும், ஒரு மாநாகரசபையின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள கழிவகற்றும் மையத்தில் ஏற்படும் அசம்பாவிதம் இன்னமும் இரகசியமாக இருப்பது கவலைக்குரியது.

காக்கைதீவுக் கழிவகற்றும் மையத்தில் குப்பைகள் சட்டவிரோதமாக அகற்றப்படுகின்றன என்பதை யாழ்ப்பாணம் மாநகரசபை உறுப்பினர்களே ஏற்றிருக்கின்றனர். சட்டவிரோத குப்பைகளையும், தரம் பிரிக்கப்படாமல் அகற்றப்பட்ட குப்பைகளைகளையும் ஆதாரமில்லாமல் அழிப்பதற்காக திட்டமிட்டே தீ பற்றவைக்கப்படுகின்றது என அமர்வுகளின்போது மாநகரசபை உறுப்பினர்கள் வெளிப்படையாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றனர். பொதுமக்களின் குற்றச்சாட்டும் அதுவாகவே உள்ளது. எனவே, இந்த விவகாரம் தீர்க்கமாக விசாரிக்கப்பட வேண்டும். சட்டவிரோதமாக அகற்றப்படும் குப்பைகள் தீவைத்து அழிக்கப்படுகின்றன என்றால், இது இத்துடன் முடிந்துபோதும் விடயமல்ல. இதன் பின்னணியில் பெரும் குற்றப்பின்னணிகள் எதிர்காலத்தில் தோன்றுவதற்கு கூடுதலான சாத்தியங்கள் உள்ளன என்பதை உயர் அதிகாரிகள் புரிந்துகொள்ள வேண்டும். எனவே, வந்தபின் நொந்துகொள்வதற்குப் பதிலாக, வருமுன் காக்கும் நடவடிக்கைகளே தற்போது அவசியப்படுகின்றன.

பல்வேறு உள்ளூராட்சி சபைகளுக்கு எதிராகவும், அவற்றுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்காகவும் வடமாகாண ஆளுநர் விசாரணைக் குழுக்களை அமைப்பதை நாங்கள் காண்கின்றோம். அத்தகைய நடவடிக்கையொன்று எடுக்கப்படுவதற்கான அவசியம் காக்கைதீவு குப்பைக்கிடங்கின் மட்டில் உள்ளது. எனவே, இனியும் இந்த விடயத்தில் பொறுமையாக இருப்பது அபத்தமானது மட்டுமல்ல, காக்கைதீவுப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு இழைக்கப்படும் அப்பட்டமான ஓரவஞ்சனையாகவுமே அமையும்.



# எல்-நினோ தாக்கத்தைச் சமாளிக்க தேசிய வேலைத்திட்டம் ஆரம்பம்!

விசேட அமைச்சரவை உபகுழு

**கொழும்பு, ஜூன் 25**

**இலங்கையில் ஏற்படக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ள 'எல் நினோ' தீவிர காலநிலை நிலைமையின் தாக்கங்களைக் குறைத்து, நாட்டைப் பாதுகாப்பதற்கான தேசிய மட்டத்திலான விசேட கூட்டுச் செயன்முறைத் திட்டம் ஒன்றைச் செயற்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கமைய, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் சமர்ப்பிக்கப்பட்ட விசேட முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

வரவிருக்கும் எல்நினோ தாக்கத்தினால் ஏற்படக்கூடிய வறட்சி, நீர் தட்டுப்பாடு, உணவுப் பாதுகாப்பு அச்சுறுத்தல் மற்றும் விவசாயப் பாதிப்புகள் போன்ற சவால்களுக்குத் தயாராகும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்காக அரசநிறுவனங்கள், மாகாணசபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், தனியார்துறை மற்றும் சமூக மட்டத்திலான அமைப்புகளை ஒன்றிணைத்து ஒரு பிரமாண்ட தேசிய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தைச் சீராக முன்னெடுப்பதற்காக விசேட அமைச்சரவை உபகுழு ஒன்றை நியமிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

அத்துடன், இந்த உபகுழுவுக்குத் தேவையான தொழில்நுட்ப ஆதரவுகள், அறிவியல் தரவுகள் மற்றும் ஆலோசனைகளை உடனுக்குடன் வழங்குவதற்காகச் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் காலநிலை நிபுணர்கள் அடங்கிய விசேட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# டொலரின் பெறுமதியில் உயர்வு

கொழும்பு, ஜூன் 25

இலங்கை மத்திய வங்கியால் நேற்று வெளியிடப்பட்டுள்ள நாணய மாற்று விகிதத் தரவுகளின்படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை அதிகரித்துள்ளது.

நேற்று அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 340.06 ரூபாவாகப் பதிவாகியுள்ளது. நேற்றுமுன்தினம் அதன் விற்பனை விலை 339.49 ரூபாவாகக் காணப்பட்டது. வெளிநாட்டு நாணய சந்தையின் நகர்வுகள் மற்றும் பொருளாதார காரணிகளுக்கு அமைவாக நாணய மாற்று விகிதங்களில் இத்தகைய தினசரி மாற்றங்கள் ஏற்படக்கூடும் என பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். (எ-இ)


# கிராம அலுவலர்கள் தொழிற்சங்க நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 25

தமக்கு அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கிராம உத்தியோகத்தர் தொழிற்சங்கக் கூட்டமைப்பு நேற்று முதல் தமது கடமைகளை மட்டுப்படுத்தும் தொழில்சார் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

திங்கட்கிழமைகளில் பிரதேச செயலகங்களுக்குச் செல்வதைத் தவிர்ப்பதற்கும், மாதாந்தப் பிரிவு நாள் கூட்டங்களைத் தவிர பிரதேச செயலகங்களால் அழைக்கப்படும் ஏனைய அனைத்துக் கூட்டங்களையும் பகிஷ்கரிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் ஏனைய அனைத்து வேலைத்திட்டங்களுக்கும் ஒத்துழைப்பு வழங்குவதில்லை எனவும் அவர்கள் அறிவித்துள்ளனர். (எ-இ)



# சாரதி பயிற்றுவிப்பாளருக்கு பயிற்சி உரிமம் கட்டாயம்

கொழும்பு, ஜூன் 25

சாரதிப் பயிற்சி நிலைய பயிற்றுவிப்பாளர்கள் கட்டாயமாக முறையான பயிற்சி உரிமத்தைக் கொண்டிருக்க வேண்டும் எனவும், அவ்வாறில்லாதவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

இது தொடர்பாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் டபிள்யூ. பி. ஜே. சேனதீர, பல நிலையங்களில் சான்றிதழ் இல்லாத நபர்களே பயிற்சிகளை நடத்துவதாகச் சுட்டிக்காட்டினார். முறையற்ற பயிற்சிகளைப் பெறும் இளைஞர்களே அதிகளவில் வீதி விபத்துகளில் ஈடுபடுவதாகவும் அவர் குறிப்பிட்டார். சான்றளிக்கப்பட்ட பயிற்றுவிப்பாளர்கள் மட்டுமே பயிற்சி அளிப்பதை உறுதி செய்வது குறித்து, மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துடன் தற்போது கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-இ)

நாளை

வெள்ளிக்கிழமை-ஆனி 09

26.06.2026

சுபநேரம் : 05.55 - 07.25

ராகுகாலம் : 10.25 - 11.55


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 2025ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தர பரீட்சையின் பெறுபேறுகள்

## மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி

இதயதாஸ் மேரியோ சஜினி 9ஏ, மரியாஜூடிசன் தனுஷியா மிச்செல் 9ஏ, செபாஸ்டியன் மேரி டெனிஸ்கலா 9ஏ, செல்வேந்திரன் காவியா 9ஏ, செபாஸ்டியன் ஆன் டென்ஷிக்கா 9ஏ கிறிஸ்டியுனேசன் மெல்வின் ஹெய்லி மரியா குரூஸ் 9ஏ சதானந்தன் அண்டநெட் அட்ஷீல் 9ஏ, பிரேம்குமார் பிரவீணா 9ஏ, ஏசுதாசன் ரியந்திகா 8ஏபி, அமரஹாசன் ஷைனி சாந்திபா 8ஏபி, நிக்கோலன் ஹலிஸ்டா ஜான்சன் 8ஏபி, செல்வராத்தினம் தனுஷாலினி 8ஏபி, அமலகாந்தன் விதுஷாலினி 8ஏசி, ஜெபபாலன் மேரி கிறிஸ்டினா 7ஏ2பி, நிர்மலன் டோனியா பிராதிக்கா பெர்னாண்டோ 7ஏ2பி, காமிலாஸ் திலீபன் அனோமிக்கா 7ஏ2பி, ஹில்டன் யோகராஜ் ஹில்மா ஜெஷானிக்கா 7ஏ2பி, ஜெயக்குமார் ஆன் ஜெரோமி ஜதுஷானா 7ஏபிசி, விமலதாசன் மிஷேல் 7ஏ2சி, கிறிஸ்டியன் ஆன் ஜூலியா 6ஏ3பி, பாஸ்கரன் தேனுஜா 6ஏ3பி, விமலன் ரிதுஷா 6ஏ2பிசி, ஆண்டன் யோகேஸ்வர ஜஸ்மிதா 6ஏ2பிசி.

## மானிப்பாய் இந்துக் கல்லூரி

ரஜனிகாந்த் விதுஷாந்த் 9ஏ, மயூரதன் கார்த்திகன் 9ஏ, திலீப்குமார் கவின் 9ஏ, சோதிநாதன் சுபாஷ்கர் 6ஏ3பி, ஶ்ரீசங்கர் ஸ்டீபன் 6ஏ2பிசி, விசிந்தன் ரோஜேஷ் 5ஏ4பி, கிருஷ்ணகாந்த் ஜெனுஷ் 5ஏ2பி2சி, ஜெனத் நிமலதாஸ் சாம் அர்ஷன் 5ஏபி3சி, குனேஸ் சாருஜன் 4ஏ2பி3சி, ஜெயந்தன் நிக்சன் 4ஏ2பி 2சிஎஸ், கிருஷ்ணகுமார் யாதவன் 3ஏ3பி2சிஎஸ், பிரபாகரன் விஷால் 3ஏ4பி2சி, ரத்னேஸ்வரன் லோகிதன் 3ஏ3பி3சி

## அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம்

நி. நிரஞ்சனா 9ஏ, பா. சபரீசன் 6ஏ2பிசி, தி. மதுசியா 3ஏ2பிசி2எஸ், ரா. தில்சிகா 2ஏ2சி3எஸ், உ. காருஜன் ஏ3பி2சி3எஸ், சே.மனோஜன் ஏபி5சி2எஸ், ஆர். வானுஜி 4பிசி3எஸ், எஸ். பகீத்திரா பி4சிஎஸ்.

## பளை மத்திய கல்லூரி

ஜெயகாந்த் சஞ்சனா 9ஏ, நகுலேந்திரராசா கவர்ச்சி9ஏ, குகதாசன் டிசாந்தன் 8ஏசி, 4பாசலிங்கம் பவித்திரா 8ஏசி, தயாபரன் லெனுதரன் 7ஏ2பி, பாஸ்கரன் டக்சான் 7ஏ2பி, ரூபஜெயந்தன் அபிலாஷ் 7ஏபிசி, சிவகுமார் தட்சயினி 7ஏபிசி, கிருஸ்ணானந்த் காரிகிருஷ்ணா 7ஏபிசி, நாகதீபன் தரணிகா 7ஏ2சி, கண்ணன் டிலக்ஷன் 7ஏசிஎஸ், பத்மபிரகாஷ் கபிஷாந்த்6ஏ3பி, தஸீராகன் கபிஷா 6ஏ3பி, ரூபேந்திரன் புகழரசி 6ஏ2பிசி, தியாகராசா தனுஷன் 6ஏபி2சி, ஜெகரூபன் ஹேசன் 6ஏ2சிஎஸ், சுதர்சன் பிரீத்தி 5ஏ4பி, மனோரஞ்சன் பமினா 5ஏபி3சி, சுதாகரன் கௌசிகன் 4ஏ4பிசி, மனோகரன் அனோஜா 4ஏ4பிசி, தவராசா தீபிகா 4ஏபி3சிஎஸ், அருள்பிரகாசம் கிரிஸ்ரிகா 4ஏ3பி2சி,தினேஷ் டிலக்ஷா 4ஏ2பிசி2எஸ், ரவீந்திரன் சஜீபனா 4ஏ2பி3சி, பரமானந்தன் அபர்ணா4ஏ2பி3சி, நிஷாந்தகுமார் தீபிகன் 4ஏ2பி2சிஎஸ், ஶ்ரீகாந்த் டிலக்ஷன் 3ஏ5பிஎஸ், ரவீந்திரன் தட்சிகா 3ஏ2பி4சி, தியாகராசா தனுப்பிரியன் 3ஏ2பி3சிஎஸ், பிரபாகரன் செரின் 3ஏ2பி2சி2எஸ், சுரேஷ் சகிலன்3ஏபி4சிஎஸ்.

## மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி

டயான் ஜோசுவா மக்ஸ்வெல் குரூஸ் 9ஏ, ஜெபநேசன் ஜெபிசன் 9ஏ, நிமல்ராஜ் கனிஷியஸ் 9ஏ, சுதாஹர் ஹரிஷ் 9ஏ, அன்ரன் கெல்ரன் 9ஏ, நுவைஸ்டீன் அகமது நுஸ்கான் 9ஏ, உமாபதி டெலின்ஸ் அமுதபிரியன் 9ஏ, பூலோகராசா அபிஷேக் 9ஏ, சாந்தக்ரூஸ் ஆரோன் ரியோரி பிகுராடோ 8ஏபி, ஜூலியன் ரமேஷ் அபிஷயன் 8ஏபி, மொகமட் மலிக் மொகமட் மவாஸ் 8ஏபி, பிரபாகரன் பிரஜின் 8ஏபி, ரஜனிகாந்த் ஆரோன்சன் 8ஏபி, அஜந்தன் சாருஜன் 8ஏசி, அன்ரனா ஜினாஸ் மினௌஷன் 7ஏ2பி, ஸ்டீபன் அபிஷேக் 7ஏ2பி, இர்பான் பயாஸ் மொகமட் 7ஏ2பி, சகாயநாதன் வினுஜன் 7ஏ2சி, அருள்நேசன் ஜெய்ரன் 6ஏ3பி, ஜூட் சந்தோஷ் கிறிஸ்ற் குரூஸ் 6ஏ2பிசி, சுதர்சன் ஜோசப் ஸ்பிட்டரி பெரீஸ் 6ஏபி2சி

## மன் / புனித ஆனாள் கல்லூரி வங்காலை

ஜெஸ்மன் கிரேசியன் யுகான்சிக்கா மார்க் 9ஏ, அன்ரனி சரோன் பீரீஸ் 7ஏபிசி, ஜெயதரன் டனிக்சா லெம்பேட் 6ஏ3பி, அன்ரன் மேரி வருட்சனா 6ஏ 2பிசி, சூசையா அன்டன்ஸ் தரங்கினி சோசை 6ஏ2பிசி, றொனால்ட் யேசுதாசன் அன்ரனிஸ் பதுமன் குலாஸ் 6ஏ2பிசி



## புற்றுநோய்க்கான ஆபத்தை ஏற்படுத்தும் பொலித்தீனில் அன்னதானம் வழங்காதீர்!

### பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அறிவுறுத்து

பூநகரி, ஜூன் 25

ஆலயங்களில் நிகழ்த்தப்படும் விசேட திருவிழாக்களின்போது அன்னதானத்தை பொலுத்தீன் பைகளில் வழங்காமல், மாற்று ஏற்பாடுகளாக வீடுகளிலிருந்து கொண்டு வரும் உலோகப் பாத்திரங்களிலோ, வாழையிலை, தாமரையிலையிலோ வழங்குங்கள் என்று பூநகரி மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் அறிவுறுத்தியுள்ளார். பூநகரி கறுக்காய்தீவுப் பகுதி ஆலயமொன்றின் நிர்வாகத்தினருடனும், மக்களுடனும் மேற்கொண்ட கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொலித்தீன், பிளாஸ்ரிக்கின் மலிவு, இலகுவான கிடைப்பனவு, நீர்க்கசிவின்மை, இலகுவாக கையாள முடிகின்றமை போன்ற இயல்புகள் காரணமாக, நாம் பொலுத்தீன், பிளாஸ்ரிக் பொருள்களை அதிக இடங்களில் பயன்படுத்துகின்றோம். சூடான உணவு மற்றும் பானங்களுடன் பொலித்தீன், பிளாஸ்ரிக் தொடுகையுறுவதன் மூலம், அதிலிருந்து ஏராளமான நச்சு இரசாயனங்கள் சிறிது சிறிதாக உணவுடன் கலக்கின்றன. இதில் உருவாகும் மைக்குறோ மற்றும் நனோ பிளாஸ்ரிக் நுண்துகள்கள் அதனுடன் கலந்துள்ள உணவை உண்பவருக்கு மட்டுமன்றி உணவுச்சங்கிலியூடாகக் கடத்தப்பட்டு, கருவிலிருக்கும் உயிர்முதல் தாயில் பாலைப்பருகும் குழந்தை வரை புற்றுநோய், உடலக ஓமோன் சமநிலைக் குழப்பம் உட்பட பல்வேறு பாதிப்புகளையும், உயிர் அச்சுறுத்தல்களையும் ஏற்படுத்துகின்றன. எனவே உயிராபத்தைத் தரக்கூடிய புற்றுநோயைத் தவிர்க்க ஆன்மிகத்தலங்களின் குருக்கள், தர்ம கர்த்தாக்கள், நிர்வாகசபை அங்கத்தவர்கள், அறங்காவலர்கள் மற்றும் உபயகார்கள் இது குறித்து கவனமெடுக்கவேண்டும்-என்றார். (கு)



## ஆண்களுக்கான குண்டு போடுதலில் யாழ்.மத்திய கல்லூரிக்குத் தங்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான, குண்டு போடுதல் போட்டியில், யாழ்.மத்திய கல்லூரி மாணவன் டி.அர். அஷான் தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளார். யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுவரும் மெய்வன்மைப் போட்டிகளில், 16 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான குண்டு போடுதல் போட்டியில், யாழ்.மத்திய கல்லூரி மாணவன் டி.ஆர்.அஷான் 13 மீற்றர் தூரம் எறிந்து தங்கப்பதக்கத்தையும், முல்லைத்தீவு வள்ளிபுனம் மகாவித்தியாலய மாணவன் ஆர். சந்தோஷ் 12.55 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப்பதக்கத்தையும், யாழ். வீமன்காமம் மகாவித்தியாலய மாணவன் 12.43 மீற்றர் தூரம் எறிந்து வெண்கல பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர். (க-422)

## உயரம் பாய்தல் போட்டியில் மல்லாவி மாணவிக்கு தங்கம்



யாழ்ப்பாணம், ஜூன் 25

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில், மல்லாவி மத்திய கல்லூரி மாணவி கே. துஷ்யந்தினி தங்கப்பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுவரும், வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டிகளில், 16 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில், மல்லாவி மத்திய கல்லூரி மாணவி கே.துஷ்யந்தி 1.43 மீற்றர் உயரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி ரி. ஆரதி 1.41 மீற்றர் உயரம் பாய்ந்து வெள்ளிப்பதக்கத்தையும், திருமுறிகண்டி இந்து வித்தியாலய மாணவி எஸ். நந்தினி 1.39 மீற்றர் உயரம் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர். (க-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கேள்வி அறிவித்தல்
## நல்லூர் பிரதேசசபை, கொக்குவில்
## சபை நிதி - 2026
## Wheel Backhoe Loader வாகனங்களை வாடகைக்கு அமர்த்தல்

1. தலைவர், பிரதேச பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விக்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றது.
2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும், அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில், (தொலைபேசி இலக்கங்கள் 021-222-2700, பக்ஸ் இல 021-222-0138 e.mail – npsnallur@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் 25.06.2026 திகதியிலிருந்து 2026.07.08 ஆம் திகதி வரை மேற்கூறிய அலுவலகத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 16.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூர்ணமான கேள்வி ஆவணமொன்றை தமிழ் மொழியில் நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் அலுவலகத்தில் 25.06.2026ஆம் திகதியிலிருந்து 08.07.2026 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1000/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
6. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில், எனும் முகவரிக்கு 09.07.2026ஆம் திகதி மு.ப10.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர், அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
7. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 77 (எழுபத்தேழு) நாட்கள் (23.09.2026) வரையும் செல்லுபடியாகும்.
8. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
9. கேள்வி முன்னாயத்த கூட்டம் 02.07.2026 (வியாழக்கிழமை) மு.ப 11.00 மணிக்கு சபையின் கலந்துரையாடல் மண்டபத்தில் இடம்பெறும்.

| ஒப்பந்த இலக்கம் | பொருட்களின் விபரம் | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|
| | | | மீளளிக்கும் பிணை வைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NPS/2026/ CF– II/JCB | நல்லூர் பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட இடங்களில் கைவிடப்பட்டுள்ள நிலையிலுள்ள பற்றைக்காணிகள் துப்பரவு செய்தல், காரைக்கால் தரம்பிரித்தல் நிலையத்தில் தேங்கியுள்ள குப்பைகளைத் தரம் பிரித்தல் மற்றும் அவற்றை வாகனங்களில் ஏற்றுதல் மற்றும் கிடங்குகள் வெட்டுதல். | வியாபாரப் பதிவுச் சான்றிதழ் உள்ள நிறுவனமாக இருத்தல் | 35,000.00 | 21.10.2026 |

தலைவர்,
பிரதேச பெறுகைக்குழு,
நல்லூர் பிரதேசசபை,
கொக்குவில்.

2026.06.25

(cr 47731) N

## கேள்வி அறிவித்தல்
## மாநகர சபை - யாழ்ப்பாணம்.
## பாவனைக்குதவாத வாகனங்களின் விற்பனை

1. முதல்வர் - மாநகரசபை யாழ்ப்பாணம் அவர்களால் பாவனைக்குதவாத பின்வரும் வாகனங்களை விற்பனை செய்வதற்காக ஆர்வமுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்வி மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| கேள்வி இல | வாகன இல | வகை / உற்பத்தி | கேள்விப் பிணைப் பணம் |
|---|---|---|---|
| JMC/2026/01 | NP HI 6308 | Agriculture Land Vehicle – JHONEDEERE PY 5203 | 4,000.00 |
| JMC/2026/02 | NP HI 6299 | Agriculture Land Vehicle – JHONEDEERE PY 5203 | 4,000.00 |
| JMC/2026/03 | NP HI 6302 | Agriculture Land Vehicle – JHONEDEERE PY 5203 | 4,000.00 |
| பதிவு நீக்கம் செய்யப்பட்ட வாகனங்கள் | | | |
| JMC/2026/04 | Land Vehicle – SAME 503 - I | | 500.00 |
| JMC/2026/05 | Land Vehicle – SAME 503 - II | | 500.00 |
| JMC/2026/06 | HAND TRACTOR Land Vehicle – SHAKTI VWH 120 | | 500.00 |
| JMC/2026/07 | Land Vehicle – LOCALLLY BUILT TRACTOR TRAILER - I | | 500.00 |
| JMC/2026/08 | Land Vehicle – LOCALLLY BUILT TRACTOR TRAILER - II | | 500.00 |
| JMC/2026/09 | Land Vehicle – LOCALLLY BUILT TRACTOR TRAILER - III | | 500.00 |
| JMC/2026/10 | Land Vehicle – NIROSH TRACTOR TRAILER | | 500.00 |

2. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஒவ்வொரு கேள்வி ஆவணங்களையும் எழுத்து மூலமான கோரிக்கையுடன் ரூபா 590/= இனை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்தி அலுவலக நாட்களில் 25.06.2026 ஆந் திகதி தொடக்கம் 14.07.2026 ஆந் திகதி வரை மு.ப 9.30 மணி தொடக்கம் பி.ப 3.00 மணி வரையான காலப்பகுதியில் மாநகர சபை, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.
3. கேள்விதாரர்கள் இவ் வாகனங்களை அலுவலக நாட்களில் 25.06.2026 ஆந் திகதி தொடக்கம் 14.07.2026 ஆந் திகதி வரை மு.ப 9.30 மணி தொடக்கம் பி.ப 3.30 மணி வரை மாநகர சபை வளாகம், பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் பார்வையிடலாம்.
4. ஒரு கேள்விதாரர் ஒன்றிற்கு மேற்பட்ட வாகனங்களிற்கும் விலைக்கேள்வி ஆவணங்களைச் சமர்ப்பிக்கலாம். ஆனால், ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனியான விலைக் கேள்வி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. கேள்விதாரர்கள் அட்டவணையில் குறிப்பிட்டவாறு கேள்விப் பிணைப் பணத்தினை (Bid Security) வைப்பாக முன்னரங்க அலுவலகம் மாநகர சபை யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் எனும் பெயரில் பணமாக செலுத்துதல் வேண்டும்.
6. கேள்வி ஆவணங்கள் உள்ளடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'கேள்விப் பத்திர மூலம் --வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான விண்ணப்பம் - வாகன இல ..............." எனக் குறிப்பிட்டு 15.07.2026 ம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு "தலைவர், பெறுகைக் குழு, மாநகர சபை, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்" என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது மாநகர சபை அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் கேள்விதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
7. கிடைக்கப்பெற்ற கேள்விகளை முழுமையாக ஏற்றுக்கொள்வதற்கோ அல்லது ஒப்பந்த அளிப்பிற்கு முன்னரான காலப்பகுதியில் எந்நேரத்திலும் கேள்விதாரர்களின் பொருட்டு எதுவித பொறுப்புக்களையும் ஏற்காது கேள்வி முறைமையை முடிவுறுத்தி சகல கேள்விகளையும் நிராகரிப்பதற்கு பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

முதல்வர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

25.06.2026

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 15.05.1946
மறைவு 23.06.2026

எமது ஆலயத்தின் பிரதம குருக்கள்
சிவஸ்ரீ குமரகுருபர சிவாச்சாரியார் மற்றும் உதவிக் குருக்கள் சிவஸ்ரீ யசோதர சிவாச்சாரியார் ஆகியோரின்
அன்புத் தந்தையும் எமது ஆலயத்தின் பூசகருமான
**அமரர் சதாசிவசர்மா நடேஸசர்மா**
அவர்கள் கடந்த 23.06.2026 ஆம் திகதி
அன்று சிவபதம் அடைந்தமையால்,
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின்
ஆத்ம சாந்திக்காக நந்தாவில் கற்புலத்து
மனோன்மணி அம்பாளைப்
பிரார்த்திக்கிறோம்.
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

**பரிபாலனசபை**
**கொக்குவில் நந்தாவில் கற்புலத்து**
**மனோன்மணி அம்பாள் ஆலயம்**
**கொக்குவில் கிழக்கு.**

(CS/61734) J-1



# பேருந்தில் தவறவிடப்பட்ட தங்கச்சங்கிலி ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25

பேருந்தில் தவறவிடப்பட்ட பெண்ணின் தங்கச் சங்கிலியை சாரதியும், நடத்துநரும் அவரைத் தேடிச் சென்று ஒப்படைத்தனர். யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை இடையிலான தனியார் (780) பேருந்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை, வேலணைப் பிரதேச செயலக கிராம அலுவலர் பயணித்த போது, அவரது தங்கச் சங்கிலி பேருந்தில் தவறி வீழ்ந்துள்ளது. பயணம் முடிவில் பேருந்தில் சங்கிலி இருப்பதை நடத்துநர் அவதானித்தார். இதனையடுத்து சாரதியும் நடத்துநரும் பிரதேச செயலகத்துக்குச் சென்று சங்கிலியை அவரிடம் ஒப்படைத்தனர்.

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
23 . 07 . 1956



விண்ணில்
25 . 06 . 2021

**திருமதி இராசலட்சுமி இராஜசேகரம்**
(ஓய்வுநிலை உபஅதிபர் - யா/ பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி)

பாடசாலையிலும் சரி
சமூகத்திலும் சரி
ஆலயமோ வேறு எந்த வைபவங்களிலும் சரி
சமாளிப்பு என்ற மனப்பான்மையுடனும்
பாசச் சிறு கூட்டில் நேச வழிகள் காட்டி
ஏன் பிரிந்தாய் அம்மா!
தேன் இலையான் கூட்டில்
இராணித்தேனி வழிகாட்டுவது போல்
கூட்டுக் குடும்பத்தில் வழிகாட்டுபவரே
எங்குசென்றீர்

கணவர். சி. இராஜசேகரம்
சகோதரிகள்
வளர்ப்புமகள் - கோ.நிவேதிகா
ஒன்றுவிட்ட அண்ணன்மார், உற்றார், உறவினர்கள்
077 8417 922

மாதகல் வடக்கு,
மாதகல்.

(CS/61744) J-1

## யா/நீர்வேலி அத்தியார் இந்துவின்
# மணிவிழா வாழ்த்தும் சேவை நயப்புப் பாராட்டும்



இன்று 25.06.2026 வியாழக்கிழமை ஓய்வுபெறும்
எங்கள் கல்லூரியின் பகுதித்தலைவரும் விஞ்ஞான பாட ஆசிரியருமான

**திரு. தம்பிராசா விக்னேஸ்வரன் (SLTS-I)**

**அவர்களின்**
**மணிவிழா வாழ்த்து**

விந்தை மிகு விஞ்ஞானம் தனை
மாணவர் சிந்தையுள் புகுந்திடவே
கொஞ்சு தமிழில் மணியாய் பேசியே
வித்துவமாய் கல்விப் பணி நல்கி
கற்றலொடு ஒழுக்கம் தனை பேணிடவே
உளவிருத்திச் சிந்தனையை மிளிரச்செய்து
புலமைதோய் நெறி செல்ல
வித்திட்ட எங்கள் விஞ்ஞான ஆசானே
நீர்வையில் சிட்டிசன் ஆகி
இன்றைய நெட்டிசன் காலம் வரை
பணி தந்த செம்மலே
வாழி பல்லாண்டு !!!!! வாழி பல்லாண்டு !!!!!

**சேவைக்காலம்**
கிளி/ மாசார் அ.த.க பாடசாலை
03.02.2000 - 30.06.2003
கிளி/ இயக்கச்சி அ.த.க பாடசாலை
01.07.2003 - 04.01.2009
யா/ இடைக்காடு மகா வித்தியாலயம்
05.01.2009 - 15.01.2017
யா/ நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி
16.01.2017 இன்று வரை

**வாழ்த்துவோர்**
**ஆசிரிய நட்புறவுக் கழகத்தினர்**

(CS 61742) J1

## கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு
## 2026 ஆம் ஆண்டில் முல்லைத்தீவு கடற்கரை சுற்றுலா மையத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் முல்லைத்தீவு கடற்கரை பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட கடைகளை 02வருட குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படு கின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 26.06.2026 - 09.07.2026 வரை (முற்பகல் 9.00 மணி தொடக்கம் பி.ப 02.00 மணி வரை அலுவலக நாட்களில் மட்டும்)
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :-10.07.2026 பி.ப 01.30 மணி வரை
கேள்விப்பத்திரம் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :- 10.07.2026 பி.ப 02.00 மணி

| இல | கடை இலக்கம் | கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் ரூபா | கடைக்குரிய மாதாந்த வாடகைத் தொகை ரூபா | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (VAT,NB) நீங்கலாக |
|---|---|---|---|---|---|
| | முல்லைத்தீவு உப அலுவலகம் | | | | |
| 1 | கடை இல - 01 | 2,000.00 | 3,000.00 | 3,000.00 | 30,000.00 |
| 2 | கடை இல – 02 | 2,000.00 | 3,000.00 | 3,000.00 | 30,000.00 |
| 3 | கடை இல - 03 | 2,000.00 | 3,000.00 | 3,000.00 | 30,000.00 |

**நிபந்தனைகள்:**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. கேள்விப்பத்திரத்தினை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை செயலாளர் / தவிசாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு. என்னும் முகவரிக்கும் மற்றைய பிரதியினை உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு என்னும் முகவரிக்கும் முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் முல்லைத்தீவு கடற்கரை சுற்றுலா மையத்தில் அமைந்துள்ள புதிய கடை இல....... என கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் 10.07.2026 முற்பகல் 10 மணிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென கரைதுறைப்பற்று பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். கேள்வி நேரத்தின் பின்னர் கிடைக்கும் படிவங்கள் நிராகரிக்கப்படும்.
03. கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் கிராமசேவையாளரினால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திற்க சமூகமளித்து விண்ணப்ப படிவத்தை பெற்றுக் கொள்ள முடியும்.
04. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங் கப்பட மாட்டாது எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்பட மாட்டாது.
05. குறித்த கடையினை ஒப்பந்ததாரர்கள் எந்த வகையிலும் உப வாடகைக்கு வழங்கவோ உரிமை மாற்றம் செய்யவோ முடியாது.
06. கடைகளுக்கு மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்தப்படல் வேண்டும். அத்துடன் குறித்த கடையானது சிற்றுண்டிச்சாலையாகவே நடாத்த முடியும்.
07. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வி தொடர்பிலும் இறுதி முடிவெடுக்கவும் கேள்விச்சபைக்கே பூரண அதிகாரமுண்டு.
08. அதிகூடிய கேள்வித்தொகை கூறும் கேள்விதாரருக்கு ச்பையுடனான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் 2வது கேள்விதாரருக்கு கடை வழங்கப்படும். ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்பு பணம் மீளளிக்கப்படமாட்டாது.
09. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் ஒரே தடவையில் கேள்வித் தொகையின் முழுத் தொகையையும் பி.ப 2.30 மணிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்த உடன்படிக்கை பூர்த்தி செய்தல் வேண்டும்.
10. கேள்வித் தொகை எந்த சந்தர்ப்பத்திலும் சபையால் மீளளிக்கப்பட மாட்டாது.
11. சபையின் அனுமதியின்றி எதுவித திருத்த வேலைகள்,மாற்றங்கள்,புனரமைப்பு வேலைகளும் மேற் கொள்ள முடியாது.
12. மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளின் பிரகாரம் நடக்க தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டு செலுத்தப்பட்ட பணத்தொகைகள் மீளளிப்பு செய்யப்படமாட்டாது என்பதுடன் அவர்களது பெயர் தவறுநர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்படும்.
13. சபையின் தவிசாளரின்/செயலாளரின் இந்த ஒப்பந்தம் தொடர்பாக எதுவித முடிவையும் ஏற்க வேண்டும். இது தொடர்பாக செயலாளருக்கு எதிராக நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க முடியாது.
14. கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தவிசாளர்,
கரைதுறைப்பற்று பிரதேச சபை, முல்லைத்தீவு. 25.06.2026

# வழிபாட்டுத் தலங்களின் அதீத சத்தம் மாணவர்கள், நோயாளிகள் பாதிப்பு!

### யாழ். மாவட்டச் செயலர் எச்சரிக்கை

**யாழ்ப்பாணம், ஜுன் 25**

**யாழ். மாவட்டத்திலுள்ள வழிபாட்டுத்தலங்களில் ஒலிபெருக்கிகள் மற்றும் ஒலி எழுப்பும் சாதனங்கள் மூலம் ஏற்படுத்தப்படும் அதீத சத்தத்தினால் பாடசாலை மாணவர்கள், முதியவர்கள் மற்றும் நோயாளிகள் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டு வருகின்றனர். எனவே வழிபாட்டுத்தலங்கள் இவ்விடயத்தில் சமூகப் பொறுப்புடன் செயற்பட்டு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என யாழ். மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது- ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில், க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தரம் ஆகிய முக்கியமான பரீட்சைக் காலங்களிலும், ஏனைய சாதாரண நாள்களிலும் மாணவர்கள் வீடுகளில் அமைதியாகக் கற்பதற்கு இந்த அதீத சத்தம் தடையாகவுள்ளது. இவ்வாறான தொடர் ஒலி இடையூறுகளால் எதிர்காலச் சந்ததியினரின் ஒட்டுமொத்த கல்வி நடவடிக்கைகளும் முழுமையாகப் பாதிக்கும் சூழல் காணப்படுகிறது.

கல்வித்துறையினர் மாத்திரமன்றி, சமூகத்தின் ஏனைய தரப்பினரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர். எனவே, அனைத்து வழிபாட்டுத் தலங்களின் நிர்வாகங்களும் சிந்தித்துச் சுயகட்டுப்பாட்டுடன் செயற்படவேண்டும்.

அவ்வாறு இணங்கிச் செயற்படாத பட்சத்தில், பொதுமக்களின் அமைதியைக் கருத்திற்கொண்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (ச-66-9)

# வடக்கு, கிழக்கில் வெல்ல முடியும்!

### பெரமுன தெரிவிப்பு

மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வெல்லமுடியும் என்ற நம்பிக்கை எமக்கு இன்னும் ஏற்படவில்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

தேர்தல் நடத்தப்பட்டால் மீண்டும் 3 சதவீதத்துக்கு இறங்கிவிடுவோம் என அரசாங்கம் அஞ்சுகின்றது. அதனால்தான் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்றது. தேர்தல் நடத்தப்பட்டால் நிச்சயம் நாம் போட்டியிடுவோம். எனினும் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் எல்லாம் வெல்லமுடியும் என்ற நம்பிக்கை இல்லை.

தற்போதைய நிலைவரப்படி ஏனைய சபைகளில் ஐந்து சபைகளில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி ஆட்சி அமைக்கும். எமது தலைமையிலான கூட்டணியே மாகாணசபைத் தேர்தலில்வெற்றிபெறும்- என்றார். (ச-இ)

## பெயர் மாற்றம்

வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகக் கொண்ட **ஸ்ரீநேதாஜி கிருஸ்ணன்** ஆகிய நான் எனது பெயரை **ஸ்ரீநேதாஜி கிருத்திகன்** என பெயர்மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **ஸ்ரீநேதாஜி கிருத்திகன்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோஷலிஷ குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(CS 61743) N **ஸ்ரீநேதாஜி கிருத்திகன்**

# ST. JOHN'S COLLEGE, JAFFNA
## VACANCY

Applications are hereby invited from qualified persons (preferably graduates in the relevant field) for the following vacancy:

**Teacher – Science (English Medium) - Grade 6 - 11 Classes**

Send your complete CV with the contact details of two non-related referees, along with the photocopies of relevant educational and professional certificates, by registered post to the address given below before 03rd July 2026.

Please indicate "**Applications / Science Teacher (EM)**" at the top left-hand corner of the envelope.

*(Only shortlisted candidates will be called for an interview)*

The Principal,
St. John's College,
Jaffna

(ct 47726) N

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தேசிய முன்பள்ளிக் கல்விமுறை 2027க்குள் கட்டாயமாக்கப்படும்!

## அமைச்சர் சரோஜா தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 25

**எதிர்வரும் 2027ஆம் ஆண்டுக்குள் நாட்டின் ஒன்பது மாகாணங்களுக்கும் ஒரே மாதிரியான 'தேசிய முன்பள்ளிக் கல்வி முறையை' நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது என மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்பள்ளிக் கல்வியானது இலங்கையில் இன்னும் ஒரு அரச சேவையாக மாற்றப்படவில்லை.

முன்பள்ளி ஆசிரியர்களின் ஆட்சேர்ப்பு நடைமுறைகளைக் கண்காணிப்பதற்கோ அல்லது அவர்களுக்கு நியமனங்களை வழங்குவதற்கோ முறையானதொரு அமைச்சோ அல்லது சட்டக் கட்டமைப்போ தற்போதைக்கு இல்லை.

பெரும்பாலான முன்பள்ளிகள் தனியார் நிறுவனங்களாகவே இயங்குவதால், அவற்றின் அபிவிருத்திக்காக அரச நிதியை நேரடியாகச் செலவிடுவதில் அரசாங்கத்துக்குப் பெரியதொரு சிக்கல் ஏற்படுகிறது.

ஆசிரியர்களின் தொழில்முறைத் திறன்களை மதிப்பிடுவதற்கான தொடர்ச்சியான செயல்முறையொன்றும் தற்போது நடைமுறையில் இல்லை. தற்போதைய முன்பள்ளிக் கல்விமுறை இப்போது ஒரு கடுமையான வணிகப் போட்டித்தன்மைக்கு முகங்கொடுத்துள்ளது. இதன் காரணமாகவே, இன்றைய சமூகத்தில் மனிதநேயமிக்க பிள்ளைகள் உருவாவது மிக அரிதாகியுள்ளது.

இந்த நெருக்கடி நிலையை மாற்றுவதற்காக 2027ஆம் ஆண்டாகும் போது, நாட்டின் 9 மாகாணங்களுக்கும் ஒரே மாதிரியான தேசிய முன்பள்ளிக் கல்விமுறை உருவாக்கப்பட்டு, அனைத்து முன்பள்ளிகளும் முறையாக ஒழுங்குபடுத்தப்படும்.

முன்பள்ளிகளின் தரத்தை மேம்படுத்துவதோடு, ஆசிரியர்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கும், அரசாங்கத்தினால் ஒழுங்குபடுத்தப்படும் முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி நடைமுறையொன்று உருவாக்கப்படும் - என்றார். (ச-இ)

# மத்திய கிழக்கின் அமைதிக்கு ஆதரவு வழங்குவதற்குத் தயார்

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

கொழும்பு,ஜூன் 25

மத்திய கிழக்கின் நிலைமை அமைதியை நோக்கி நகரும் ஸ்திரத்தன்மைக்காக இலங்கை தனது அதிகபட்ச ஆதரவை வழங்கத் தயாராக உள்ளது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் கலாநிதி போல் கபூர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்து இருதரப்புக் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

சந்திப்பின்போது இலங்கையின் ஏற்றுமதிப் பங்கில் தனிநாடாக மிகப் பெரிய பங்கை அமெரிக்கா கொண்டுள்ளதுடன், இரு நாடுகளுக்கும் இடையே நிலவும் இந்த வர்த்தக ஒத்துழைப்பை இருதரப்புக்கும் பயனளிக்கும் வகையில் மேலும் வலுப்படுத்துவது குறித்தும், அதற்காக அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக ஒப்பந்தப் பணிகளை எவ்வளவு விரைவாக நிறைவுசெய்ய முடியுமோ அவ்வளவு விரைவாக நிறைவுசெய்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டது. அத்துடன் பிராந்தியத்தின் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்காக இலங்கை தனது அதிகபட்ச ஆதரவை வழங்கத் தயாராக உள்ளது என்றும் ஜனாதிபதி உறுதியளித்தார். (ச-இ)

# நீதித்துறைக்கு அழுத்தம் விவாதம் நாடாளுமன்றில் அமளிதுமளி!



கொழும்பு.ஜூன் 25

நீதிமன்ற வெற்றிடங்கள் மற்றும் நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை அதிகரிப்பது தொடர்பான அவசர விவாதத்தை நடத்த அரசாங்கம் அனுமதி மறுத்ததைத் தொடர்ந்து, நாடாளுமன்றத்தில் நேற்று கடுமையான வாக்குவாதமும் பதற்றமும் நிலவியது. இதன் காரணமாகச் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன சபையை 10 நிமிடங்களுக்கு அவசரமாக ஒத்திவைத்தார்.

நேற்றுக் காலை நாடாளுமன்ற அமர்வுகள் ஆரம்பமான போது உரையாற்றிய எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா, நாட்டில் நிலவும் நீதித்துறை வெற்றிடங்கள் மற்றும் நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை அதிகரிக்கும் முன்மொழிவு குறித்து இன்றைய தினமே விவாதம் நடத்தப்படவேண்டும் என வலியுறுத்தி 20 எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்ட அவசரக் கடிதமொன்றைச் சபாநாயகரிடம் கையளித்துள்ளதாகச் சபைக்கு அறிவித்தார்.

எதிர்க்கட்சியின் இந்தக் கோரிக்கைக்குப் பதிலளித்த சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க, தற்பொழுது நாடாளுமன்றத்தில் நடந்துகொண்டிருக்கும் விவாதங்களை ஒத்திவைக்க முடியாது எனக் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் இந்த அறிவிப்பைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நாடாளுமன்ற உறுப்பினர்களான கலாநிதி ஹர்ஷ டி சில்வா மற்றும் தயாசிறி ஜயசேகர உள்ளிட்ட பல எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆளும் கட்சிக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பியதுடன் கடுமையான அதிருப்தியையும் வெளியிட்டனர். இதையடுத்து இருதரப்புக்கும் இடையே கடுமையான வாக்குவாதம் முற்றியது. சபையைத் தொடர்ந்து நடத்த முடியாத அளவுக்குப் பதற்றம் அதிகரித்ததால், சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன நாடாளுமன்றத்தை 10 நிமிடங்களுக்கு தற்காலிகமாக ஒத்திவைப்பதாக அறிவித்தார். (ச-இ)

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ஆயுதமாகப் பயன்படுத்தும் அரசு!

## முன்னாள் நீதியமைச்சர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 25

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முழுமையாக நீக்கும் நோக்கம் தற்போதைய அரசாங்கத்துக்கு அறவே இல்லை என முன்னாள் நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தபோது, தற்போதைய வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், கடுமையான கோபத்துடன் இந்தச் சட்டங்களை நாடாளுமன்றத்தில் கொண்டுவர நாங்கள் அனுமதிக்க மாட்டோம். எங்களுக்குத் தேவை பயங்கரவாதத்துக்காக புதிய சட்டங்களைக் கொண்டு வருவதல்ல, இருக்கின்ற பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக ஒழிப்பதுதான்' என்று கத்தியது நினைவிருக்கிறது. யுத்தம் இல்லாத இந்த நாட்டில் எதற்கு பயங்கரவாதச் சட்டங்கள் என்று அன்று கேள்வி எழுப்பியவர்கள், இன்று அதே கொடூரமான பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்தி மக்களுக்குச் சித்திரவதைகளைக் கொடுத்துவருகிறார்கள். இந்தக் கொடூரமான சட்டத்தை மேலும் நீண்ட காலத்திற்குக் கைவசம் வைத்திருப்பதற்காகவே அரசாங்கம் தற்போது புதிய குழுக்களை நியமித்து நாடகமாடுகிறது - என்றார். (ச-இ)



# ஏக்கிய இராஜ்ஜியத்துக்குள் முடங்கி இலங்கைத் தமிழரசுக்கட்சி துரோகம்

## சுகாஸ் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 25


வரலாற்றுச் சிறப்புமிக்க வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடையும் சூழலில், இலங்கைத் தமிழரசுக் கட்சி அதற்கு முற்றிலும் மாறாக ஒற்றையாட்சி முறைமைக்குள் முடங்கி தமிழ் மக்களுக்கு துரோகம் இழைப்பதாக தமிழ்த்தேசியமக்கள் முன்னணியின் ஊடகப்பேச்சாளர் சட்டத்தரணி கே. சுகாஸ் குற்றஞ்சாட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கொண்டுவரத் தயாராகும் ஒற்றையாட்சி (ஏக்கிய இராஜ்ஜிய) அரசியலமைப்பு வரைவை உருவாக்குவதில் தமிழரசுக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் முதன்மைப் பங்களிப்பை வழங்கியுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார். அவரால் எழுதப்பட்ட இந்த ஒற்றையாட்சி வரைபைத் தமிழர்களின் அரசியல் தீர்வாக அவர்கள் தலையில் திணிக்க தமிழரசுக் கட்சி தீவிரமாக முனைந்து வருவதாகவும் இச்செயற்பாடு 1976இல் தமிழ் மக்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கு எதிரானது என்றும் சுகாஸ் சாடியுள்ளார். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை பிரகடனப்படுத்திய தந்தை செல்வாவின் வழிவந்த தமிழரசுக் கட்சி, இன்று ஒற்றையாட்சிக்கு முட்டுக்கொடுத்து அதற்குள் முடங்கிக்கிடப்பது, வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கும் தந்தை செல்வாவுக்கும் இழைக்கப்படும் அப்பட்டமான அரசியல் துரோகமாகும் என அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (சு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாலை புங்கடி சொர்ணாம்பிகை உடனுறை அம்பலவாணேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் முத்தேர்ப்பவனி கடந்த ஞாயிற்றுக்கிழமை நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் பக்தி பூர்வமாக இடம்பெற்றது.
(எ-41-66)



# மரண அறிவித்தல்



## வேலுப்பிள்ளை சுந்தரம்

டச்சுவீதி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் தம்பையாவீதி கல்வயல் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சுந்தரம் நேற்று (24.06.2026) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - ஜானகி தம்பதியரின் அன்பு மகனும், இந்திராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சீதாலட்சுமி, இரத்தினம், சரஸ்வதி, சின்னத்தம்பி, தங்கம்மா, பாலச்சந்திரன், ஞானசேகரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - பூரணம் தம்பதியரின் மருமகனும், பமிலா, காலஞ்சென்றவரான நளினி, சுபாசினி, பிரதீபன், சுதாமதி, ஆகியோரின் அன்புத் தந்தையும், மணிவண்ணன், ராஜ்குமார், அனிதா, கோவர்தனன் ஆகியோரின் அன்பு மாமனாரும், நிரோஜன், அக்சயா, நிதுசன், கபிநயா, அருமிகா, ஹரிணி, அபிசயா, பிருத்விகா, டென்சிகா ஆகியோரின் அன்பு பேரனும், தர்மரத்தினம், குணரத்தினம், ஜீவரத்தினம் மற்றும் காலஞ்சென்ற ரதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25.06.2026) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 2.00 மணிக்கு சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(CR 47732)A

**தம்பையா வீதி,**
**கல்வயல், சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**0774673302**

## வேலை ஆட்கள் தேவை

நிறுவனம் ஒன்றிற்கு சாரதி மற்றும் அலுவலக உதவியாளர்கள் தேவை. (ஆண்/பெண்)

தொடர்புகளுக்கு:-

**077 880 0126, 077 387 4263**

# மரண அறிவித்தல்



**தோற்றம்**
**24.07.1936**

**மறைவு**
**24.06.2026**

## திருமதி சிவநாயகி சுப்பிரமணியம்

இல. 31 மாசியப்புல வீதி, ஏழாலை வடக்குஏழாலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவநாயகி சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (24.06.2026) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (முன்னாள் ஆசிரியர், ஏழாலை சைவமகாஜனா வித்தியாசாலை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - ஆச்சிமுத்து தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா - தங்கம் தம்பதியரின் மருமகளும், சிவபாதசுந்தரம், சிவமணி, சிவனேஸ்வரி, சிவானந்தநாதன் (ஆனந்தன்), சிவஞானசுந்தரம் (Dr.ஞானா), சிவயோகம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற தங்கவேல், ஜெயரூபன் (Swiss), ஸ்ரீதரன் (London) ஆகியோரின் தாயாரும், சர்மிளா (Swiss), சுபா (London) ஆகியோரின் மாமியாரும், ஜெதுஷன் ஜானுகா (Swiss), திபிக்ஷா, திக்ஷா, திஷா (London) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (26.06.2026) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் : குடும்பத்தினர்**
**இல.31, மாசியப்புல வீதி, ஏழாலை வடக்கு, ஏழாலை.**
**077 922 7300 - Dr.Gnana,**
**0041 764 114 850- மகன்,**
**020 892 24398**

(CS/32048) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## குப்பைக்...

பெரும் தீவிபத்து ஏற்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் - காக்கைதீவு குப்பைக்கிடங்கில் அண்மைக்காலமாகத் தொடர்ந்து தீப்பரவல் ஏற்பட்டு வருகின்றது. நேற்றுமுன்தினம் மாலையும் அங்கு தீவிபத்து ஏற்பட்டது. பெரும் சிரமத்துக்கு மத்தியிலேயே தீ கட்டுக்குள் வந்தது. இவ்வாறான நிலையில், நேற்றும் அங்கு தீப்பரவல் ஏற்பட்டுள்ளமை மக்கள் மத்தியில் பெரும் சந்தேகங்களை தோற்றுவித்துள்ளது.
இதேவேளை, யாழ்ப்பாணம் கல்லுண்டாய்வெளி திண்மக்கழிவகற்றும் நிலையத்திலும் நேற்றுத் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. இந்தத் தீப்பரவலின் பின்னணியில் திட்டமிட்ட சதிச் செயல்கள் காரணமாக இருக்கலாம் என்று மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இது தொடர்பில் விரிவான விசாரணைகளும், தடயவியல் ஆய்வுகளும் நடத்தப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-ம-26)

## கணவனும்,...

சந்தேகநபர்கள் இருவர் யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.
கண்டி தெல்தெனியப் பகுதியில் அண்மையில் பெண் மருத்துவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.
இந்தப் படுகொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர்களாக குடும்பத்தலைவர் ஒருவரும், அவருடைய மனைவியும் அடையாளம் காணப்பட்டிருந்தனர். அவர்கள் தலைமறைவாகியிருந்த நிலையில், அந்த இருவரையும் கைது செய்யும் நடவடிக்கைகள் துரித கதியில் இடம்பெற்று வந்தன. இந்த நிலையில், வெள்ளவத்தையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி அவர்கள் தனியார் பேருந்தொன்றில் பயணம்மேற்கொள்கின்றனர் என்று பொலிஸாருக்கு இரகசியத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. அந்தத் தகவலுக்கு அமையவே சாவகச்சேரியில் வைத்து அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.
கைது செய்யப்படும்போது பிரதான சந்தேகநபர் மாஸ்க் அணிந்திருந்ததுடன் அவருடைய மனைவி முஸ்லிம் பெண் போன்று வேடமிட்டிருந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவர்கள் நீர்கொழும்பு மற்றும் சிலாபம் பகுதிகளில் சமீப நாள்களாகத் தங்கியிருந்ததுடன், கடல் மார்க்கமாக வெளிநாட்டுக்குத் தப்பிச்செல்லத் திட்டமிட்டிருந்தனர் என்பதையும் பொலிஸார் கண்டறிந்துள்ளனர். அவர்களிடம்மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-66)

## கருத்துச்...

இளங்குமரன் தெரிவித்தார்.
சாவகச்சேரி நகரசபையின் உபதவிசாளர் ஞா.கிஷோர் ஆளுநரால் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ள நிலையில், அதைக் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இளங்குமரன் எம்.பி. இவ்வாறு கூறியுள்ளார்.
ஆளுநரின் செயலை ஏற்க முடியாது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-ம-26)

## மாநகர...

வவுனியா மாநகரசபையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிர்வாகச் சீர்கேடுகள் மற்றும் நிதி முறைகேடுகள் தொடர்பில் மாநகரசபை மேயர் காண்டீபனுக்கு எதிராகப் பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன. இந்த விடயம் தொடர்பில் முன்னாள் நீதிபதி தலைமையில் விசாரணை களும் இடம்பெற்று வந்தன.
இதேவேளை, உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையை சாவகச்சேரி நகரசபையின் உபதவிசாளர் ஞா.கிஷோர் கடுமையாக விமர்சித்து உரையாற்றியிருந்தார். அவ்வாறு உரையாற்றும்போது அந்தச் சுற்றறிக்கையை தூக்கி வீசியுமிருந்தார். இந்த விடயம் தொடர்பிலும் ஆளுநர் விசாரணைகளை நடத்தினார்.
இந்த விசாரணைகளைத் தொடர்ந்தே, வவுனியா மாநகரசபையின் மேயர் சு.காண்டீபன், சாவகச்சேரி நகரசபையின் உபதவிசாளர் ஞா.கிஷோர் ஆகியோர் வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனால் நேற்றுப் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.
கருத்துச் சுதந்திரத்தை வெளிப்படுத்தியமைக்காக, மக்களால் தெரிவுசெய்யப்பட்ட சாவகச்சேரி நகரசபையின் உபதவிசாளர் ஞா.கிஷோரை அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து ஆளுநர் நீக்கியமைக்குப் பல்வேறு தரப்பினரும் தமது அதிருப்தியையும் கண்டனத்தையும் பதிவுசெய்து வருகின்றனர். (அ-ம-26)

## சட்டமூலம்...

தெரிவித்தார். மாகாணசபைத் தேர்தல் எப்போது நடத்தப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜேசி அலவதுவல எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்ததாவது:-
மாகாணசபைத் தேர்தல் குறித்து நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஆராய்ந்து வருகின்றது. மாகாணசபைத் தேர்தல் தொடர்பான சட்டத்திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னர் தேர்தலை மிக விரைவாக நடத்துவோம் - என்றார். (அ-ம-இ)

## போக்குவரத்துப்...

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக அதிகரித்த வேகத்தில் வாகனச் செலுத்துகைகள் மற்றும் மதுபோதையில் மோட்டார் சைக்கிள் களைச் செலுத்துதல் போன்ற குற்றச் செயல்கள் அதிகரித்து வருகின்றன.
இத்தகைய குற்றங்களால் கடந்த சில நாள்களில் ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன், ஓய்வுநிலை அதிபர் ஒருவரும் கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்தார்.
இதையடுத்தே, வீதி விபத்துகளைத் தடுக்குமாறுகோரி பொதுமக்கள் இணைந்து நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
கிளிநொச்சி பொலிஸாரின் அசமந்தப் போக்காலேயே விபத்துகள் அதிகரித்து வருகின்றன. எனவே, கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரியும், கிளிநொச்சி மாவட்ட போக்குவரத்துப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரியும் உடனடியாக பதவி விலக வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினார்கள். இது தொடர்பான மனுவொன்றையும் கிளிநொச்சி மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரனிடம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வழங்கினர். (அ-ம-55-113)

## வேலையற்ற...

அந்தப் போட்டிப் பரீட்சையில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்று வலியுறுத்தியே போராட்டம் நடத்தவுள்ளதாக பட்டதாரிகள் கூறியுள்ளனர்.
[illegible]த்தில் வேலைவாய்ப்பு வெற்றிடங்கள் காணப்படும் நிலையில் அவற்றுக்குப் பட்டதாரிகளை உள்ளீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களில் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளையும் இந்தப் போராட்டத்தின்போது முன்வைக்கவுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (அ-ம-66)

## நீதிமன்ற...

கடந்த 2024ஆம் ஆண்டு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய டிப்பரின் இலக்கத்துக்குப் பதிலாக, பிறிதொரு டிப்பரின் இலக்கத்தை வழங்கினார் என்ற குற்றச்சாட்டு அந்த அதிகாரிக்கு எதிராகச் சுமத்தப்பட்டிருந்தது. கடந்த இரண்டு வருடங்களாக இந்த வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்தன. இவ்வாறான நிலையிலேயே முள்ளியவளைப்பொலிஸாரால் நேற்றுமுன்தினம் அந்த அதிகாரி கைது செய்யப்பட்டார். அவரை ஜூலை மாதம் 2ஆம் திகதிவரை மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம-113-19)

## கோத்தாபயவின்...

மனுவை ஜூலை மாதம் 6ஆம் திகதி வரையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.
உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தான் கைதாவதைத் தடுத்து நிறுத்துமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கோத்தாபய ராஜபக்ச அண்மையில் ரிட்மனு தாக்கல் செய்திருந்தார். பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஷானி அபேசேகர உள்ளிட்டவர்கள் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்ட அந்த மனுமீது நேற்று விசாரணைகள் இடம்பெற்றன. இதைத் தொடர்ந்தே அடுத்தகட்ட விசாரணைக்காக ஜூலை மாதம் 6ஆம் திகதிவரை மனு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

## வடமாகாண...

துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
சாவகச்சேரி நகரசபை உபதவிசாளர் கிஷோர் பாரதூரமான குற்றம் எதிலும் ஈடுபடவில்லை. உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையை விமர்சித்ததற்காக மட்டுமே அவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். கருத்துச் சுதந்திரத்தின் மீதான தாக்குதலையே இது வெளிப்படுத்துகின்றது.
மாகாணசபைத் தேர்தல்கள் தொடர்ந்து நடத்தப்படாமல் இருக்கும் சூழலில், எதிர்ப்புக் குரல்களை அடக்கவும் விமர்சகர்களை தண்டிக்கவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆளுநரின் அதிகாரங்களையும் அரச அதிகாரத்தையும் பயன்படுத்தி வருகின்றது - என்றுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்டப் பகுதியில் பிரதிஷ்டை செய்யப்பட்ட நாகபூசணி அம்மனின் திருவுருவச்சிலைக்கு. உருத்திர சேனை அமைப்பினரால் மீளவர்ணம் பூசப்பட்டுள்ளது. (சு-66)

## காந்தி ஆரம்ப வித்தியில் கற்றல் வள நிலையம்

கிளிநொச்சி, ஜூன் 25

கோணாவில் காந்தி ஆரம்ப வித்தியாலயத்தில் கற்றல் வளநிலையம் நேற்றுத் திறக்கப்பட்டுள்ளது. பாடசாலை அதிபர் வி.செல்வானந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு. முரளிதரன், கரைச்சி கோட்டக்கல்விப்பணிப்பாளர் சு. தர்மரத்தினம் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். கல்வியமைச்சின், அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலைத் திட்டத்தின்கீழ் 21 மில்லியன் ரூபா செலவில் குறித்த கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. (சு-113)





## மருதங்கேணி செயலகத்துக்கு பதில் பிரதேச செயலர் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகத்தின், பதில் பிரதேச செயலராக எவ்.சி.சத்தியசோதி உத்தியோகபூர்வமாக நேற்றுமுன்தினம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இலங்கை நிர்வாகசேவையின் தரம் - I உத்தியோகத்தரான இவர், தற்போது சாவகச்சேரிப் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலராகவும் கடமையாற்றிவருகின்றார். அதேவேளை, வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலராகக் கடமையாற்றிய திருமதி சு.உஷா, இலங்கை நிர்வாகசேவையின் விசேட தரத்துக்குப் பதவியுயர்வு பெற்று, கிழக்கு மாகாண சபைக்கு மாற்றலாகியுள்ளார். (சு-66-9)



குட்டியப்புலம் அபிராமி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை 'கிரியா திலகம்' பேரம்பலநிருசனக்குருக்கள் தலைமையில் இடம்பெற்றது. (எ-41)


## மரண அறிவித்தல்

மலர்வு 21 . 12 . 1978



உதிர்வு 24 . 06 . 2026

### விக்னேஸ்வரன் செல்வலட்சுமி

யாழ் வண்ணார்பண்ணை, பத்திரகாளி கோவிலை பிறப்பிடமாகவும், இல.10, பெரியதம்பிரான் வீதி, வண்ணார்பண்ணை மேற்கு யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட விக்னேஸ்வரன் செல்வலட்சுமி அவர்கள் நேற்று (24.06.2026) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு (வில்லுத்தகடு) - பரிமளம் தம்பதியரின் அன்பு மகளும், செல்வராஜா (மூர்த்தி) - முத்துலட்சுமி தம்பதியரின் மருமகளும், விக்னேஸ்வரன் (தீயணைப்பு சேவை - யாழ். மாநகரசபை) அவர்களின் அன்பு மனைவியும், ராஜலக்சுமி, விஜயலட்சுமி (சுவிஸ்), ஜலதீபன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஸகிலேஷ் (9H யாழ் இந்துக் கல்லூரி), அஸ்விதா (6F வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயும், செல்வக்குமார் (Halo Trust), செல்வராணி, கலைச்செல்வி, திசா (ஜேர்மனி), சண்முகலிங்கம் (சண்-சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.06.2026) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.10, பெரியதம்பிரான் வீதி,
வண்ணார்பண்ணை மேற்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
0771710782(கணவர்)
0771884499(மைத்துனர்)
+41788275128(சுவிஸ்)
+4915233745586 WP

(CS 32034)A


# நினைவேந்தல்



யாழ்ப்பாணம், ஜூன் 25

கே.ஏ.எஸ். சத்தியமனை நூலக அன்னை திருமதி வள்ளியம்மை சுப்ரமணியத்தின் ஓராண்டு நினைவேந்தல் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை, சுழிபுரம் கே.ஏ.எஸ்.சத்தியமனை நூலக வளாகத்தில் நடைபெறும். நிகழ்வில் பாடசாலை மாணவர்களது கலைநிகழ்வுகள், நினைவுப் பகிர்வு, கலந்துரையாடல் ஆகிய நிகழ்வுகள் நடைபெறும். அன்னாரின் நினைவாக ஆண்டுதோறும் வழங்கப்பட்டுவரும் 'சிறுவர் ஆக்க ஆளுமை விருது' வழங்கப்படவுள்ளது. முதலாவது விருதுக்குரிய படைப்பாளராக திருமதி கோகிலா மகேந்திரன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (சு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.